13.08.2024

O.S.No.284/2017

வா.சா.1.திரு. சிவக்குமாரன் த.பெ.சிவசுப்பிரமணியன்

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

குறுக்கு விசாரணை தொடர்ச்சி

1. 1951ம் ஆண்டில் அழகன் செட்டியார் இறந்த பின்பு ராஜேஸ்வரி ஆச்சியும், வள்ளியம்மை ஆச்சியும் வரையறுக்கப்பட்ட உரிமை அடைந்து தாவா சொத்தினை அனுபவித்து வந்தார் என்றால் சரியல்ல. 1956ம் ஆண்டுக்கு பின்னிட்டு மேற்படி இருவரும் தாவாசொத்தினை முழுமையாக பெற்று உரிமையார்களாக ஆண்டு அனுபவித்து வந்தார்கள் என்றால் சரியல்ல. வள்ளியம்மை ஆச்சி இறந்த பின்பு அவரது ஒரே மகளான மீனாட்சிஆச்சி வாரிசு உரிமை படி வள்ளியம்மையின் பாக சொத்தினை பெற்று ஆண்டு அனுபவித்து வந்தார் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் மீனாட்சி ஆச்சிக்கு பாதி பங்கும் ராஜேஸ்வரி ஆச்சிக்கு பாதி பங்கும் சித்தித்துள்ளது என்றால் சரயில்ல. மீனாட்சி ஆச்சி வாரிசு இல்லாமல் காலமானபின்பு அவரது பாக சொத்தினை ராஜேஸ்வரி ஆச்சியும், தெய்வாணை ஆச்சியின் வாரிசுதாரர்களும் அனுபவித்து வந்தார்கள் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் ராஜேஸ்வரி ஆச்சிக்கு 5/8 பங்கும் அவரது மகளான யோகாம்பிகை மற்றும் தெய்வாணை ஆச்சியின் பெண் மக்களான கனகாம்பிகை மற்றும் உமா ஆகியோர்களுக்கு தலா 1/8 பாகம் சித்தித்துளளது என்றால் சரியல்ல.

2. ராஜேஸ்வரி ஆச்சி இறந்த பின்பு வாரிசுரிமைப்படி அவரது மகளான யோகாம்பிகை என்பவருக்கு 4/8 பாகம் சித்தித்துள்ளது என்றால் சரியல்ல. கனகாம்பிகை ஆச்சி இறந்த பின்பு தாவா சொத்துக்களை அவரது வாரிசுதாரர்கள் ஆண்டு அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதியின் கணவரும் 2, 3 பிரதிவாதியின் தகப்பனாருமான ராஜமாணிக்கம் என்பவர் தாவாசொத்தில் ராஜேஸ்வரி ஆச்சியிடம் இருந்து உழவடை பெற்று விளைச்சலில் பாதியை கொடுத்து வந்தார் என்றால் சரியல்ல. மேற்படி ராஜமாணிக்கம் இறந்த பின்பு அவரது வாரிசுகளான இந்த பிரதிவாதிகள் தாவா சொத்தில் உழவடைக்கு இருந்து ராஜேஸ்வரி ஆச்சியிடமும், அவரகது பின்பு அவரது வாரிசுதாரர்களிடமும் உழவடை செலுத்தி வருகிறார்கள் என்றால் சரியல்ல. தாவா சொத்து மீனாட்சி ஆச்சிக்கு தனித்த உரிமை உடைய சொத்து என்று காண்பிப்பதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என்ன ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் உயில் ஆவணம் தாக்கல் செய்துள்ளேன், செட்டில்மெண்ட் பத்திரம் என் கைவசம் உள்ளது.

3. எந்த ஆவணத்தின் அடிப்படையில் அந்த உயில் எழுதப்பட்டது என்று வா.சா.ஆ-1 உயில் ஆவணத்தில் சொல்லி உள்ளதா என்றால் அவருக்கு பாத்தியப்பட்ட சொத்து என சொல்லி உள்ளார். மேற்படி உயில் ஆவணத்திற்கு முன்பு தாவா சொத்தினை மீனாட்சி ஆச்சி அனுபவித்து வந்தார் என்பதற்கு வருவாய் ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், ஆனால் மீனாட்சி ஆச்சியின் தகப்பனார் பெயரில் வருவாய் ஆவணங்கள் இருந்தன. மீனாட்சி ஆச்சிக்கு தாவாசொத்து சீதனமாக

கிடைத்தது என்று இந்த வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ-1 ஆவணத்தில் 1937 செட்டில்மெண்ட் ஆவணப்படியும், அசல் வழககு எண்.289/2004 வழக்கில் உள்ள இறுதிநிலை மனுவில் கண்டுள்ள சொத்துக்களையும் சேர்த்து உயில் எழுதி வைக்கப்பட்டுள்ளதாக காணப்படுகிறது என்றால் சரிதான். தாவா சொத்து அந்த வழக்கில் இல்லை. மேற்படி உயில் ஆவணத்தின் அசல் இந்த நீதிமன்றத்தில் அசல் வழககு எண்.64/2008 வழக்கில் தாக்கலாகி உள்ளது. என்னிடம் காட்டப்படுவதுதான் அந்த வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பு என்றால் சரிதான். அந்த ஆவணம் பி.வா.சா.ஆ-1 ஆகவும், அதன் தீர்ப்பாணை பி.வா.சா.ஆ-2 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. வா.சா.ஆ-1 உயில் ஆவணத்தில் கண்டுள்ள 1937ம் வருடத்திய செட்டில்மெண்ட் ஆவணத்தில் உள்ள சொத்துக்களை பொறுத்து அசல் வழககு எண்.64/2008 வழக்கில் பதினெட்டாம்படியான், சந்திரா, ரேவதி ஆகியோர்கள் விளம்புகை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்து தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

4. மேற்படி வழக்கில் வா.சா.ஆ-1 ல் கண்டசெட்டில்மெண்ட் சொத்தினை மீனாட்சிஆச்சி 1941 தான செட்டில்மெண்ட் பத்திரம் மூலம் காசிராஜன் செட்டியாருக்கு எழுதி கொடுத்தாக மேற்படி பதினெட்டாம்படியான், சந்திரா, ரேவதி ஆகியோர்கள் வாதம் புரிந்துள்ளார்கள் என்றால் சரிதான். மேற்படி வழக்கில் வா.சா.ஆ-1ல் கண்ட செட்டில்மெண்ட் சொத்து வா.சா.ஆ-1 ஆவணப்படி எனக்கு பாத்தியம் என எதிர்வாதம் புரிந்தேன் என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ-1 உயில் ஆவணம் மேற்படி அசல் வழக்கு எண்.64/2008 வழக்கில் வா.சா.ஆ-37 ஆவணமான குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த வழக்கில் என்னையும், உயில் சாட்சி பிச்சை பட்டர் என்பவரையும் சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ளோம் என்றால் சரிதான். அந்த வழக்கில் 08.03.2017ல் தீர்ப்பு வழங்கப்பட்டது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ-1 தீர்ப்புரையில் 22ம் பக்கத்தில் இந்த வழக்கின் வா.சா.ஆ-1 உயில் ஆவணம் ஏற்பட்ட போது அதில் காட்டப்பட்டுள்ள செட்டில்மெண்ட ஆவண சொத்துக்களை பொறுத்து, மீனாட்சி ஆச்சிக்கு எந்த உரிமையும் இல்லை என்றும், எதிர்காலத்தில் கிடைக்கக்கூடிய சொத்துக்களை பாத்தியப்படுத்தி, இந்த வழக்கின் வா.சா.ஆ-1 உயில் ஆவணம் எழுதப்பட்டுள்ள நிலையில், அந்த உயில் ஆவணம் சட்டப்படி எழுதி வைப்பதற்கு சட்டப்படி மீனாட்சி ஆச்சிக்கு அதிகாரம் இல்லை எனவும் கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான், அந்த உயில் ஆவணப்படி நான் பட்டா மாற்றியதும் சட்டவிரோதமானது அந்த தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான், ஆனால் அது தவறான முடிவாகும், அதற்கு எதிராக மேல்முறையீடு செய்யப்பட்டு நிலுவையில் உள்ளது.

5. அந்த வழக்கில் இந்த வழக்கின் வா.சா.ஆ-1 உயில் ஆவணம் சட்டப்படி செல்லதக்கதல்ல என தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ-1 தீர்ப்புரையில் 23ம் பக்கத்தில் பி.வா.சா.ஆ-37 உயில் ஆவணம் சட்டப்படி செல்லதகுந்த ஆவணம் இல்லை என்றும், அது வாதிகளை கட்டுப்படுத்தாது என்றும், தீர்வு காணப்பட்டுள்ளது என்றால் சரிதான், ஆனால் அந்த முடிவிற்கு எதிராக நாங்கள் மேல்முறையீடு செய்து நிலுவையில் உள்ளது. தாவா சொத்து அசல் வழக்கு எண்.289/2004 வழக்கின் இறுதிநிலை தீர்ப்பாணை மனுவில் காட்டப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மீனாட்சி ஆச்சி எழுதி வைத்த உயில் ஆவணம் செல்லதக்க ஆவணம் அல்ல என்று பி.வா.சா.ஆ-1 தீர்ப்பில் கூறப்பட்டுள்ள போது தாவா

சொத்தில் எனக்கு எந்த உரிமையும் சித்திக்கவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தில் பிரதிவாதிகள் உழவடை செய்து வருவதை அழகன்செட்டியார் வாரிசுகள் யாரும் ஆட்சேபணை செய்யவில்லை என்றால் அவர்களுக்கு சொத்தில் உரிமை இல்லை என்பதால் அமைதியாக இருந்துள்ளார்கள். இதுவரையில் மீனாட்சி ஆச்சிக்கு இறுதிநிலை தீர்ப்பாணை படி பாகம் ஒதுககப்படவில்லை என்றால் சரிதான், அந்த மனு நிலுவையில் உள்ளது, அவ்வாறு இருக்கும் போது மீனாட்சி ஆச்சி எழுதி வைத்ததாக சொல்லப்படும வா.சா.ஆ-1 உயில் ஆவணத்தின் படி எனதுபெயருருககு நான் பட்டா மாற்றியுள்ள சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. நான் செட்டில்மெண்ட் சொத்தினை பொறுத்துதான் பட்டா மாற்றினேன்.

6. பி.வா.சா.ஆ-1 தீர்ப்பில் இந்த வழககின் வா.சா.ஆ-1 உயில் கண்டுள்ள செட்டில் மெண்ட் ஆவணம் செல்லதக்கதல்ல என்று தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான், ஆ னால் நாங்கள் அதற்கு எதிராக நாங்கள் மேல்முறையீடு செய்துள்ளோம். தாவாசொத்தினை நான் உயில் ஆவணப்படி உரிமை கொண்டாடுகிறேன். அந்த உயில் ஆவணம் ஏற்கனவே செல்லதக்கதல்ல என்று தீர்ப்பளித்துள்ளதால் அதன்படி நான் உரிமை கொண்டாட முடியாது என்றால் சரியல்ல. வா.சா.ஆ-1 உயில் ஆவணம் சட்ட விரோதமானது என்று தீர்மானிக்கபட்டுள்ளபடியால் அதன் மூலமாக ஏற்பட்ட வருவாய் ஆவணங்கள் அனைத்தும் சட்ட விரோதமானது என்றாலும, தாவா சொத்தில் எனக்கு உந்த உரிமையும் சித்திக்கவில்லை என்றாலும் சரியல்ல. வா.சா.ஆ-10 ஆவணம் எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் அதில் கண்டுள்ள சொத்தில் எனக்கு உரிமை உள்ளது என்பதனை காண்பிப்பதற்காக தாக்கல் செய்துள்ளேன். மேற்படி வா.சா.ஆ-10 ஆவணத்தில் நீதிமன்ற உத்தரவுப்படி அந்த ஆவணம் செல்லாது என விளம்புகை செய்து நீக்கறவு செய்து உத்தரவிடப்பட்டுள்ளது என்று காணப்படுகிறது என்றால் சரிதான்.

7. தாவா சொத்திற்கு எவ்வளவு ரூபாய் வரியாக செலுத்தியுள்ளேன் என்றால் சுமார் 50 முதல் 100 வரை செலுத்தியுள்ளேன். அந்தந்த ஆண்டினை பொறுத்து உள்ளது. வா.சா.ஆ-8 ஆவணத்தில் கிராம நிர்வாக அலுவலரின் கையெழுத்து இல்லை என்றால் சரிதான், அதில் வட்டாட்சியர் அலுவலக முத்திரை உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ-1 முதல் வா.சா.ஆ-10 வரையான ஆவணங்கள் மோசடியானவை என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ-1 தீர்ப்பானது இந்த வழககு தாக்கல் செய்வதற்கு முன்பே தீர்ப்பளிக்கப்பட்டு விட்டதால் அதில் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ-1 உயில் ஆவணம் செல்லாது என முடிவு செய்யப்பட்டதை, இந்த வழக்கில் சொல்லவில்லை என்றால் சரிதான். அந்த சங்கதியை மறைத்து, இந்த நீதிமன்றத்தினை ஏமாற்றும் நோக்கத்தில், எனக்கு ஆதரவாக தீர்ப்பு வழங்குவதற்காக கரைபடிந்த கரத்துடன் இந்த நீதிமன்றத்தினை அனுகி உள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் இடைக்கால உறுத்துக்கட்டளை வழங்கப்பட்டிருந்தாலும், அந்த உத்தரவு முறையாக நீட்டிக்கப்படாமல் அந்த மனு முடித்து வைக்கப்பட்டது என்றால் சரிதான்.

8. தாவா சொத்திற்கு தென்பக்கம் பள்ளிக்கூடம் உள்ளது என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் புகைப்படத்தில் உள்ளதுதான் அந்த பள்ளிக்கூடமும்**,** தாவா சொத்தும் என்றால் சரிதான்**.** அந்த புகைப்படங்கள் இரண்டு எண்ணிக்கை பி**.**வா**.**சா**.**ஆ**-3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த

புகைப்படமான 30.03.2024ல் எடுக்கப்பட்டதாக காணப்படுகிறது என்றால் சரிதான். அந்த புகைப்படத்தில் தாவா சொத்தில் தண்ணீர் பாய்வதுபோல் குழாய் உள்ளது என்றால் சரிதான், ஆனால்
அந்த குழாய் இருப்பது போல் இவர்களாகவே உற்பத்தி செய்துள்ளார்கள். இன்றைக்கும் தாவா சொத்தில் தற்போது குழாய் உள்ளதா என்றால் உள்ளது. தாவாசொத்தில் பிரதிவாதிகளின் கேணியில் இருந்து தண்ணீர் வருவதுபோல் குழாய் அமைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான், ஏற்கனவே நா்ன அமைத்திருந்தேன், அதை பிடுங்கி விட்டு அவர்கள் அமைத்துள்ளார்கள். அந்த கேணியில் இருந்து தாவா சொத்திற்கு  தற்போது தண்ணீர் பாய்ச்சப்படுகிறது என்றால் தெரியாது. தாவா  சொத்தில் நெல் விவசாயம் செய்யப்படுகிறது என்றால் நான்தான் பயிரிட்டுள்ளேன்.   என்னிடம் காட்டப்படும புகைப்படம தாவா சொத்தில் நெல்பயிர் விளைந்திருப்பதை காட்டப்படும் புகைப்படம் என்றால் சரிதான், அந்த புகைப்படங்கள் **4** எண்ணிக்கை பி**.**வா**.**சா**.**ஆ**-4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பிரதிவாதிகள் தான் தாவாசொத்தில நெல் பயிரிட்டு வருகிறார்கள்  என்றால் சரியல்ல, நான்தான் நெல் பயிரிட்டுள்ளேன்.

9. தாவா சொத்தில் நான் நெல் பயிரிட்டுள்ளதாக இந்த வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றாலும், பிரதிவாதிகள்தான் தாவாசொத்தில் நெல் பயிரிட்டு அனுபவம் செய்து வருகிறார்கள் என்றாலும் சரியல்ல. தாவா சொத்திற்கும், எனக்கும் எந்த உரிமையும் இல்லை என்றாலும், தாவா சொத்தில் எனக்கு எந்த அனுபவமும் இல்லை என்றாலும், தாவாசொத்தில் எனக்கு எந்த பாத்தியமும் கிடைக்கதக்கதல்ல என்றாலும் சரியல்ல. பிரதிவாதிகள் தாவாசொத்தினை என்னிடம் கிரையம் கேட்டார்கள் என்று இந்த வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்து எந்த காலத்திலும என்னுடைய சுவாதீனத்திலும், அனுபவத்திலும் இருந்ததில்லை என்றாலும், தாவா தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றாலும சரியல்ல.